Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.835/2025

**Depositions of PW- 6**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ராமசாமி | Occupation | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Father's name | சுந்தர்சிங் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of June 2026.

18.06.2026

எதிரி ஆஜர் .

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் கடந்த 30.04.2025 அன்று 22.00 மணியளவில் நான் நிலைய பொறுப்பிலிருந்தபோது ராமகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.221/2025 பிரிவுகள்.303(2) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வாதியின் புகார்மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையில் எந்த தேதியில் இவ்வழக்கு சம்மந்தப்பட்ட கண்காணிப்பு கேமரா காட்சிகள் பார்க்கப்பட்டது என்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி குறிப்பிடப்படவில்லை. மேற்படி கண்காணிப்பு கேமரா பதிவுகள் எந்த தேதியில் பதிவாகியிருந்தது என்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பேருந்தில் பேட்டரிகளை காணவில்லை என்று 23.04.2025

அன்று தெரிந்துகொண்டதாக புகார்மனுவில்குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் ஆனால் அன்று புகார் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரிதான். கடந்த 30.04.2025 அன்று தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 7 நாட்கள் காலதாமதமாகத்தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 17.04.2025 முதல் 23.04.2025 ஆகிய காலகட்டத்தில் தான் மேற்படி பேட்டரிகள் காணாமல் போயுள்ளதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் உண்மையில் மேற்படி கண்காணிப்பு கேமரா காட்சிகளை பார்வையிட்டிருந்தால் குறிப்பாக எந்த தேதியில் மேற்படி பேட்டரிகள் காணாமல் போனது என்பது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல. எதிரிகள் பற்றி எந்த விவரங்களும் புகார்மனுவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

மேற்படி நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.